# 4

# மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர்

*"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவா. 6:63).*

*கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவிக்கொண்டுள்ளவர்களில் ஏறக்குறைய எல்லாருமே, மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர் பின்வருபவற்றில் ஒரு வழிமுறையில் கிரியை செய்கின்றாரென்று நம்புகின்றனர்: (1) இழந்து போகப்பட்டுள்ளவர்களின் இருதயங்களில் நேரடியாகச் செயல்படுவதன் மூலமாக, (2) தேவனுடைய வசனத்தில் பிரசங்கிக்கப்படுதல் அல்லது வாசித்தலின் தொடர்பாக, அல்லது, (3) வசனத்தின் மூலம் மறைமுகமாக. சத்தியமானது உணர்வுரீதியான அனுபவங்களில் அல்ல ஆனால் வெளிப் படுத்தப்பட்ட தேவ வசனத்தின் மூலமாகவே கண்டறியப்பட முடியும்.*

## *"ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல்" (யோவா. 3:5)*

*வேதாகமத்தைப் படிக்கின்ற ஒவ்வொருவரும், இயேசு நிக்கொதேமுவுக்குக் கூறிய பின்வரும் கூற்றைக் கையாண்டாக வேண்டும்: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5). புரொட்டஸ்டண்டு உலகத்தின் பெரும்பான்மையானவர்கள், இயேசு இந்தக் கூற்றின் மூலமாக, புதிய பிறப்பைக் கொண்டு வருவதற்கு இருதயத்தில் பரிசுத்த ஆவியானவரின் நேரடிக்கிரியை ஒன்றைப் போதித்தார் என்று நம்புகின்றனர்.*

*"புதிய பிறப்பில்" பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு ஈடுபாடு கொள்வார் என்பதைப் பற்றி இயேசு திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை, ஆனால் அவர் [ஆவியானவர்] ஈடுபாடு கொள்வார் என்று மாத்திரமே அவர் [இயேசு] குறிப்பிட்டார். ஆவியானவர் புதிய பிறப்பைக் கொண்டுவருவது எவ்வாறு என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஒருவர் புதிய ஏற்பாட்டின் பிற போதனை களைப் படிக்க வேண்டும்.*

*யோவான் 3:5ல் உள்ள "ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரை*

*அர்த்தப்படுத்துகிறது என்று பெரும்பாலான மதக்குழுக்கள் போதிக்கையில், அவர்கள் "ஜலம்" என்ற வார்த்தையைப் பல்வேறு தவறான வழிகளில் விளக்கப்படுத்துகின்றனர்.*

*"ஜலம்" என்பது வார்த்தை என்ற வகையில் கண்ணோக்கப்பட்டது. சிலர், யோவான் 3:5ல் உள்ள "ஜலம்" என்பது "வார்த்தை"/"வசனம்" என்பதாக நம்புகின்றனர். "சில விளக்கவுரையாளர்கள் 'ஜலம்' என்ற வார்த்தையில் ஞானஸ்நானத்திற்கான எந்தக் குறிப்பையும் காண்பதில் குறைவுபட்டு, எபே. 5:26ன் அடிப்படையில் தங்கள் சிந்தனைகளை அமைத்து நமது கர்த்தர் தேவனுடைய வசனத்தின் சுத்திகரிக்கும் செயல் விளைவுகளைப் பற்றிப் பேசியதாக யூகிக்கின்றனர்."[1] உதாரணமாக, ஒரு எழுத்தாளர், "எனவே அவர் நிக்கொதேமுவிடம் ஜலம் என்று குறிப்பிட்டபோது, அவர் தேவனுடைய வசனத்தையே அர்த்தப்படுத்து கின்றார். வசனத்தின் சுத்திகரிக்கும் வல்லமையின் காரணமாக இந்த ஒன்று போன்ற தன்மை தரப்பட்டுள்ளது (சங். 119:9; யோவா. 15:3; எபே. 5:26ஐக் காணவும்)" என்று உரைத்தார்.[2]*

*இயேசு, "ஜலம்" என்ற வார்த்தையை உருவகமாகப் பயன்படுத்தி யிருந்தார் என்றால், அவர் "ஆவி" என்ற வார்த்தையையும் உருவகமாகப் பயன்படுத்தவில்லை என்று நாம் எவ்வாறு அறிகின்றோம்? இந்த கூற்றில் இயேசு, ஜலம் என்ற வார்த்தையை மட்டும் உருவகமாகப் பயன்படுத்தி விட்டு, இவ்வாக்கியத்தின் மற்ற ஒவ்வொரு வார்த்தையையும் நேரடியான வகையில் ஏன் பயன்படுத்த வேண்டும்? "ஆவி," "பிரவேசித்தல்," மற்றும் "தேவனுடைய ராஜ்யம்" போன்ற மற்ற வார்த்தைகள் யாவும் நேர்ப் பொருள் தருமென்றால் "ஜலம்" என்பது ஏன் ஜலத்தைக் குறிப்பதா யிருப்பதில்லை?*

*அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகிற எபேசியர் 5:26ம் வசனம், தண்ணீரை வார்த்தை என்று கூறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, சபையானது "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால்" சுத்திகரிக்கப்படுகிறது என்று உரைக்கிறது. இங்கு, en என்ற ("in" என்று அர்த்தப்படும் மூலவார்த்தையில் இருந்து வந்த) கிரேக்க முன்னிடைச் சொல்லானது, "கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அநேகமாக, இவ்வசனமானது, சபையைச் சுத்திகரிப்பதற்கு வசனத்துடன் தண்ணீர் இணைந்து செயல்படுகிறது என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும். வசனம் மாத்திரம் சுத்திகரிப்பதில்லை. மற்றும் வசனம் இருதயத்தினுள் நுழையாத வரைக்கும் தண்ணீர் மாத்திரம் சுத்திகரிக்க இயலாது. வசனத்துடன் (அப். 11:14; யாக். 1:21) தண்ணீர் மாத்திரமே (மாற். 16:16; அப். 22:16) நமக்கு இரட்சிப்பு மற்றும் புதிய பிறப்பை விளைவிக்கக்கூடிய இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்திடம் கொண்டு வர முடியும்.*

*"ஜலம்" என்பது ஆவி என்ற வகையில் கண்ணோக்கப்பட்டது. மற்றவர்கள், "ஜலம்" என்பது ஆவியைக் குறிக்கிறது என்று வாதிட்டுள்ளனர். இவர்கள், kai என்ற கிரேக்க வார்த்தைக்கு* "and" *என்ற அதன் அடிப்படை அர்த்தத்தைத் தரக்கூடாது, ஆனால்* "even" *என்ற அதன் இரண்டாம் நிலை*

அர்த்தத்தைத் தரவேண்டும் என்று நம்புகின்றனர். இவ்விதமாக இவ்வசனப்பகுதியானது, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் கூடப் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்று வாசிக்கப்படுவதாயிருக்கும். சந்தர்ப்பப் பொருளானது இரண்டாம் நிலை அர்த்தத்தை வற்புறுத்தாத வரையில் அடிப்படை அர்த்தமே எப்போதும் பயன்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது. இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளானது "and" என்பதற்குப் பதில் "*even*" என்ற வார்த்தை பயன் படுத்தப்பட வேண்டும் என்று எவ்வகையிலும் சுட்டிக்காண்பிப்பதில்லை. "ஜலம்" என்பது "ஆவி" என்று அர்த்தப்படுவதாக்குகின்ற இப்படிப்பட்ட முயற்சியானது நிச்சயமாகவே, ஜலம் என்பது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்ற முடிவிலிருந்து தப்பிப்பதற்காகத் திட்டம் வகுத்துச் செய்யப்பட்டதாகவே உள்ளது.

தர்க்கத்தின் இன்னொரு வரிசை அமைவானது யோவான் 7:38, 39ன் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது: ''வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார் ...'' இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு ''ஜலம்'' என்ற வார்த்தையை உருவக நடையிலேயே பயன்படுத்தினார் என்பது தெளிவு. இருப்பினும், இவ்விடத்தில் அவர் "ஜலம்" என்ற வார்த்தையை உருவக நடையில் பயன்படுத்தினார் என்ற உண்மையானது, அவர் யோவான் 3:5ல் "ஜலம்" என்ற வார்த்தையை உருவகநடையில் பயன்படுத்தினார் என்று நிரூபிப்பதில்லை. யோவான் 7ல் இயேசு புதிய பிறப்பைப் பற்றிப் பேசவில்லை, ஆனால் "விசுவாசித்து" தேவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு அருளப்படுகின்ற பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார் (அப். 5:32).

''ஜலம்'' என்பது சரீரப்பிரகாரமான பிறப்பு என்ற வகையில் கண்ணோக்கப்பட்டது. இவ்விடத்தில் இயேசு சரீரப்பிரகாரமான பிறப்பை மறைமுகமாய் குறிப்பிட்டார் என்று முடிவு செய்கின்றவர்கள், "ஜலம்" என்பது [குழந்தையின்] பிறப்புடன் இணைவு கொண்டுள்ள கர்ப்பப் பை நீரைக் குறிக்கிறது என்று நம்புகின்றனர். இவர்கள் தங்களது இந்த விவாதத்தை யோவான் 3:6ன்-மீது கட்டியெழுப்புகின்றனர்: "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." இராபர்ட் ஹார்வீ என்பவர், "ஜலம் என்பது சரீரப் பிறப்பின் உண்மையையும் அடையாளப்படுத்தலாம் ... பிற்காலத்திய யூதத்துவச் சிந்தனையில், 'ஜலம்' என்பது கர்ப்பப் பையில் உள்ள உருவாக்கும் கூறு என்ற வகையில் கருதப்பட்டுள்ளது (2 எஸ்ட்ராஸ் vii. 8)" என்று கூறியுள்ளார்.[3]

இயேசு இரண்டு வகையான பிறப்பைப் பற்றிப் பேசவில்லை என்பதே இந்த முடிவுக்கான பிரச்சனையாக உள்ளது. அவர் ஜலத்தையும் ஆவியையும் உள்ளடக்குகிற ஒரே ஒரு பிறப்பைப் பற்றி மட்டும் பேசினார். ஃபிரெடெரிக் டேல் புரூனர் என்பவர் இவ்வசனத்தின்மீது பின்வருமாறு

*விளக்கம் அளித்துள்ளார்:*

> *யோவான், தாம் மாறுபட்ட இரண்டு நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது போல், “ஆவி” என்பதற்கு முன்னால் [தமிழ் மொழியில் பின்னால்], ஒரு இரண்டாவது “ஆல்” [“of”] என்பதை வைக்கவில்லை. ஒரே ஒரு ex என்பது ஒரு தனித்த நிகழ்ச்சியை விவரிக்கிறது. இந்தத் தனித்தன்மையானது, ஜலத்தினாலும் ஆவியினாலும் “ஒருமுறை பிறந்த” என்று நேரடியாக அர்த்தப்படுகிற gennethe என்ற, ஒருமுறை மாத்திரம் வருகிற பொருட்கருத்துச் செயப்பாட்டுச் சொல்லினால் முழுமையாக நிலைநாட்டப்படுகிறது.*[4]

*ஹோமர் கென்ட் Jr. மற்றும் பிற கல்வியாளர்கள், “கிரேக்க மொழி யானது ... ஒரு முன்னிடைச் சொல்லின் செயப்படு பொருட்களாக, kai என்ற வார்த்தையைக் கொண்டு இணைக்கப்பட்ட சுட்டுச்சொல் எதுவுமற்ற இரண்டு பெயர்ச்சொற்களைப் பயன்படுத்துகிறது, இவ்விதமாக இவைகள் முற்றிலும் தனித்தவைகள் அல்ல ஆனால் ஒரே கருத்தின் அம்சங்கள் என்று கருத்துத் தெரிவிக்கிறது” என்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர்.*[5]

*இயேசு, ஜலத்தினால் ஒரு பிறப்பு பற்றியும் ஆவியினால் இன்னொரு பிறப்பு பற்றியும் பேசவில்லை. அவர் “ஜலத்தினாலும் ஆவியினாலும்” ஆன ஒரே ஒரு பிறப்பைப் பற்றிப் பேசினார்.*

*“ஜலம்” என்பது ஒரு அடையாளம் மாத்திரமே என்ற வகையில் கண்ணோக்கப்பட்டது. மற்றவர்கள், ஞானஸ்நானத்தின் “ஜலம்” என்பதை இயேசு அடையாளமாக மாத்திரம் அர்த்தப்படுத்தினார் என்று நம்புகின்றனர். அவர் நிக்கொதேமுவிடம் கூறிய உரையானது, இரட்சிப்புக்கு அல்லது பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு ஞானஸ்நானத்தின் அவசியத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுகிறது என்று நினைப்பதில்லை. வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள், “ஆகையால், தெளிவான அர்த்தம் பின்வருமாறு; ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருத்தல் என்பது போதுமானதாயிருப்ப தில்லை. இந்த அடையாளம் மதிப்புள்ளதாகவும் முத்திரையாகவும் உள்ளது. ஆனால் இந்த அடையாளம், பின்வரும் குறிப்பிடத்தக்க விஷயத்துடன் இணைவு பெற்றிருக்க வேண்டும்: பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும் செயல்பாடு” என்று எழுதினார்.*[6]

*ஒருவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால், அவர் ஆவியினால் பிறந்தால் மாத்திரம் போதாது, ஆனால் அவர் “ஜலத்தி னாலும் ஆவியினாலும்” பிறந்திருக்க வேண்டும் என்று இயேசு உரைத்தார் என்பதே, மேற்கூறப்பட்ட முடிவுக்கு உள்ள பிரச்சனையாக இருக்கிறது. ஜலம் என்பது ஒரு அடையாளத்தையும் மற்றும் முத்திரையையும் அர்த்தப் படுத்தினாலும் இல்லையென்றாலும், ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு ஜலத்தை உள்ளடக்கிய ஒரு பிறப்பு அவசியம் என்று இயேசு கூறினார். ஆகையால், “ஜலத்தினாலும் ஆவியினாலும், பிறவாதவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்திருப்பதில்லை.*[7]

## *புதிய பிறப்பு*
## *(1 பேது. 1:23)*

*புதிய பிறப்பு என்பது ஞானஸ்நானத்தில் ''ஜலத்தை'' பயன் படுத்துவதால் கொண்டு வரப்படுகிறது என்றால், அந்தப் பிறப்பில் ஆவியானவர் எவ்வாறு ஈடுபட்டுள்ளார்? சரீரப்பிரகாரமான பிறப்பு என்பது தாயின் உடலில் இருந்து சரீரப் பிரகாரமான வாழ்க்கையைப் பெறும்படி வெளிவருதலை உள்ளடக்குகிறது. அந்த வாழ்வானது, தந்தையின் வித்தினால் சாத்தியமாகிறது. வித்தில் உயிர்/வாழ்வு உள்ளது.*

*ஆவிக்குரிய பிறப்பிற்கும் இதே விஷயம் உண்மையாக உள்ளது. "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளது மான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக் கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேது. 1:23). தேவனுடைய வசனம் என்ற வித்துதான் புதிய பிறப்பில் ஜீவனுக்கு ஆதாரமூலமாக இருக்கிறது. இயேசு, ''ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்று உரைத்தார் (யோவா. 6:63). புதிய பிறப்பைக் கொண்டுவரும் வசனத்தின் மூலம் ஆவியானவர் ஜீவனைக் கொடுக்கின்றார். வித்தில் ஜீவன் இருப்பது போலவே வசனத்திலும் ஜீவன் இருக்கிறது, ஆவியானவர் அவ்வசனம் வெளிப்படுத்தப்பட்டுள்ள முகமையாக இருக்கின்றார். விதையானது புதிய ஜீவனுக்குள் வருவதற்குத் தண்ணீர் அவசியமாக இருப்பதுபோல், ஒருவர் ஆவிக்குரிய வகையில் புதுப்பிறப்பை அடை வதற்கு ஜலம் அவசியம் என்று தேவன் கூறுகின்றார்.*

*நாம், ராஜ்யத்தின் விதை மூலமாக தேவனுடைய ராஜ்யத்திற்குள் ஆவிக்குரிய செடிகளாக ஜீவனுக்குள்ளாகின்றோம் (மத். 13:19-23). தேவனு டைய வசனமே நாம் ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் விதையாக உள்ளது (லூக். 8:11). ஆவியில்லாது வசனம் இராது; வசனமில்லாது ஜீவனோ அல்லது பிறப்போ இருக்க முடியாது; மற்றும் ஜீவனோ அல்லது பிறப்போ இல்லாது எவரொருவரும் ராஜ்யத்தின் உறுப்பினராக முடியாது.*

*புதிய பிறப்பானது ஆவியானவரின் நேரடியான கிரியையினால் கொண்டுவரப்படுகிறது என்று சுட்டிக்காண்பிக்கக் கூடிய உதாரணமோ அல்லது வசனப்பகுதியோ புதிய ஏற்பாட்டில் இல்லை. ஆவியானவரே, ஜீவனை உண்டாக்குகிற வசனமாகிய விதையின் ஆதாரமூலமாக இருக்கின்றார்.*

*எருசலேமில் (அப். 2:5) பெந்தெகொஸ்தே நாளில், இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பு என்பது முதன்முதலாகப் பிரசங்கிக்கப்பட்டது (லூக். 24:47). அப்போஸ்தலர்கள்மீது ஆவியானவர் வந்திறங்கிய பின்பு (அப். 2:4) ஒரு திரளான கூட்டம் கூடிற்று (அப். 2:6). அவர்கள் "வசனங்களை" கேட்கும்படி பேதுரு புத்திகூறினார் (அப். 2:14, 22). அவர்கள் "கேட்ட" போது அவர்களின் இருதயங்கள் தொடப்பட்டன (அப். 2:37). "அவனு டைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ் நானம் பெற்றார்கள்'' (அப். 2:41அ). இங்கு நாம், மக்கள் எவ்வாறு*

*மறுபடியும் பிறக்கின்றனர் என்பதற்கு ஒரு உதாரணத்தையும் விளக்கத்தையும் காண்கின்றோம். ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்த பேதுரு (அப். 2:4), இயேசு வாக்களித்திருந்தபடியே (யோவா. 14:16, 17; 16:13), ஆவியானவரால் சத்தியத்திற்குள் வழிநடத்தப்பட்டார்.*

*பேதுருவின் வார்த்தைகள், யூதர்கள் இயேசுவை மேசியா என்று விசுவாசம் கொள்ளும்படி அசைத்து (அப். 2:37; யோவா. 17:20; அப். 17:11, 12; ரோமர் 10:17ஐயும் காணவும்), அவர்களை ஞானஸ்நானம் பெறும்படித் தூண்டின (அப். 2:36-38, 41). இவ்வாறு அவர்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தார்கள். பின்பு அவர்கள், ''புத்திரர்களாய்'' இருப்பவர்களுக்கு (கலா. 4:6) அருளப்படும் "பரிசுத்த ஆவியானவரின்" வரத்தைப் பெற்றனர் (அப். 2:38).*

*இதே கருத்தை பவுல் கொலோசெயருக்குக் கூறிய கூற்றிலிருந்தும் தரவழைக்க முடியும். ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்குமுன் பாவத்தில் மரித்திருக்கின்றார் என்று அவர் கூறினார். இருப்பினும், - இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின - தேவனுடைய கிரியையில் கொள்ளுகின்ற விசுவாசத்தின் மூலமாக ஒரு நபர் அவருடன் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுகின்றார் மற்றும் இயேசுவுடன் பிழைத்திருக்கும்படியும் செய்யப்படுகின்றுர். விசுவாசிக்கும் ஒருவர், இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பிய அதே வல்லமை தமது வாழ்வையும் மாற்றி, பாவத்தில் மரித்த நிலையில் இருந்து இயேசுவுக்குள் ஒரு புதிய ஜீவனில் கொண்டுவந்து சேர்க்கமுடியும் என்று உணர்ந்தறிகின்றார் (கொலோ. 2:12, 13).*

> *இவ்விதமாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் ஏற்கனவே செயல் விளக்கப்படுத்தப்பட்டிருந்த தேவனுடைய வல்லமையான கிரியை யானது விசுவாசியின் நம்பிக்கைக்குப் பொருள் கருத்தாக உள்ளது. ஆதலால், விவாதமானது பின்வருமாறு இருக்கும்: அவர்கள் கிறிஸ்து வின் உயிர்த்தெழுதல் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டிருந்தனர். இது தேவனுடைய வல்லமையின் செயல்விளக்கத்திற்கு அடையாள மாயிருந்தது, மற்றும் அவர்கள் அந்த வல்லமையின்மீது சார்ந்திருத் தலில், ஆவிக்குரிய உயிர்த்தெழுதலானது தங்களைக் கிறிஸ்துவுடன் ஒன்றிருக்கச் செய்யும் என்று அறிந்தனர்.[8]*

*வசனத்தின் மூலமாகவே தேவனுடைய இப்படிப்பட்ட கிரியையின் மீது விசுவாசம் வருகிறது (ரோமர் 10:17).*

*இவ்வாறாக, புதிய பிறப்பு என்பது ஆவியானவரால் அளிக்கப்பட்ட வசனத்தினுடைய வல்லமையின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாகக் கொண்டு வரப்படுகிறது. விசுவாசம் என்பது ஞானஸ்நானம் என்ற செயலின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது, இது ஞானஸ்நானம் பெறுபவரை இயேசுவின் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் இணைப்பதோடு, தேவனுடைய வல்லமையில் அந்த நபர் கொண்டுள்ள விசுவாசத்தை அறியச் செய்கிறது. இயேசுவை உயிர்ப்பித்த அதே வல்லமை அந்த நபரின் வாழ்க்கையை மாற்றி, செயல் அடங்கியிருக்கும் நிலையில் இருந்து அவரை ஒரு புதிய ஆவிக்குரிய ஜீவனுக்குள் கொண்டு வருகிறது. இவ்விதமாக, புதிய ஜீவனைக் கொண்டு*

*வருவதில் ஜலமும் ஆவியும் பிரிக்கப்பட இயலாதவைகளாக உள்ளன.*

## *புது சிருஷ்டி (2 கொரி. 5:17)*

*கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் ஒரு புது சிருஷ்டியாக இருக்கின்றார், இவர் மறுபடியும் பிறந்தவராயிருக்கின்றார் (2 கொரி. 5:17). ஒருவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்போது (1 பேது. 1:22) நடைபெறும் ஞானஸ்நானத்திலிருந்து (ரோமர் 6:3; கலா. 3:27), "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது விளைகிறது. கீழ்ப்படிதல் என்பது, தேவ வசனமாகிய (யாக். 1:18; 1 பேது. 1:23), நமது இரட்சிப்பின் சுவிசேஷம் (எபே. 1:13அ) என்ற இந்த சத்தியத்தைக் கேள்விப்படுவதிலிருந்து பாய்ந்து வருகிறது.*

H. *லியோ போல்ஸ் அவர்கள் பின்வருமாறு உரைத்தார்,*

> *பாவியின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகக் கிரியை செய்கின்றார் என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை; .... முதலில் சத்தியத்தைக் கேள்விப்படாமல், கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொண்டு, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று எவரொருவரும் மனம்மாற்றப்பட்டதாகப் புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு பதிவு விஷயமும் இருப்பதில்லை.*[9]

*இரட்சிப்பிற்கான மாதிரியானது, பேதுருவின் மூலமாக பெந்தெகொஸ்தே நாளன்று அமைத்து வைக்கப்பட்டது. அவர் பிரசங்கித்த வசனங்கள் (அப். 2:14, 22, 40) அதைக் கேள்விப்பட்டவர்களின் இருதயங்களைத் தொட்டன (அப். 2:37). அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட செயலானது ஞானஸ்நானத்தை விளைவித்தது (அப். 2:41).*

*நடபடிகளில் தொடர்ந்து வந்த நடைமுறை இந்த மாதிரியைப் பின்பற்றினது. கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்பட்டது.*[10] *வசனத்தை மக்கள் கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டனர் (விசுவாசித்தனர்) (அப். 2:41; 4:4; 8:12, 14; 11:1; 17:11, 12). வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 2:41; 8:12, 35-39; 16:14, 15, 33; 18:8; 19:5).*

*மக்கள் பதில்செயல் செய்த வகையானது எபேசியர் 1:13ல் பவுலினால் தொகுத்துரைக்கப்பட்டது: "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்." சுவிசேஷத்தைக் கவனித்துக்கேட்டு, விசுவாசத்திற்குள் வந்ததைத் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவருக்குள் முத்திரையிடப்பட்டது நடந்தது என்பதைக் கவனியுங்கள். மக்களின் இருதயங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தை இடவில்லை. மாறாக, அவர்கள் சுவிசேஷத்தைக் கவனித்துக்கேட்டு, (யோவா. 17:20; அப். 17:11; ரோமர் 10:17ஐயும் காணவும்), அதைத் தேவனுடைய வசனம் என்று உணர்ந்து அறிந்ததினால் (1 தெச. 2:13) விசுவாசித்தனர். தேவனுடைய இந்த வசனம் அவர்களின் வாழ்வில் "ஜீவனும் வல்லமையுள்ளதுமாக" இருந்தது (எபி. 4:12). விசுவாசிகள் வசனத்தை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ற*

*பின்பு பரிசுத்த ஆவியானவருக்குள் முத்திரையிடப்பட்டனர் (அப். 2:38; எபே. 1:13).*

*எனவே, பரிசுத்த ஆவியானவர் நம்மைப் புதிதாக்குதல் மற்றும் மறுபடியும் ஜெநிப்பித்தல் ஆகியவற்றின் மூலமாக, நம்மை இரட்சிப்பதற்குக் கிரியை செய்கின்றார். தீத்து 3:5, "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் (நமது தேவனாகிய இரட்சகர்) நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என்று கூறுகிறது. ஆவியானவர் - தேவனுடைய வல்லமை நிறைந்த வசனமாகிய (யோவா. 17:17; எபி. 4:12) - இரட்சிப்பதற்குத் தேவபெலன் உள்ள சுவிசேஷமாகிய (ரோமர் 1:16) சத்தியத்தை அளித்தார். ஆவியானவரின் செய்திக்குப் பதில்செயல் செய்கின்றவர்கள் மறுபடியும் பிறந்து (யோவா. 3:5), ஞானஸ்நானத்தில் நடைபெறும் கழுவுதலின் மூலமாகப் புதுப்பிக்கப்பட்டு மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகின்றனர் (அப். 22:16).*

*ஃபிரெடெரிக் டேல் புரூனர் அவர்கள் தீத்து 3:4-8ஐப் பற்றி பின்வரும் கவனக்குறிப்பை வெளியிட்டுள்ளார்:*

> *இரட்சிப்பின் முழு நிகழ்ச்சியும் - தொடக்கம் முதல் முடிவு வரை - ஒரு மாபெரும் செயலாகக் காணப்படுகிறது. தேவனாகிய இரட்சகரின் தயவின் பிரசன்னத்தினால் இரட்சிப்பு ஏற்படுகிறது மற்றும் இது ஞானஸ்நானத்தின் மறுஜென்ம முழுக்காட்டுதலினாலும் பரிசுத்த ஆவியானருடைய புதிதாக்குதலினாலும் முடிவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.*[11]

*ஆகையால், புதிய பிறப்பில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்பது, பாவியாயிருப்பவர் ஞானஸ்நானம் பெறுவதினால் ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட வசனத்திற்குப் பதில்செயல் செய்யும் போது முற்றுப் பெறுகிறது (அப். 2:41).*

## *முடிவுரை*

*தேவ வசனமாகிய ஜீவனைக் கொடுக்கும் விதையைக் கொண்டு வருவதில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையானது நமது மனமாற்றத்திற்கு அவசியமானதாக உள்ளது. பாவியின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்படுதல் பற்றியோ அல்லது வசனம் இன்றி அவரை [பாவியை] அவர் [பரிசுத்த ஆவியானவர்] தனியே மனமாற்றுதல் பற்றியோ வேதாகமம் எந்த உதாரணத்தையும் கொடுப்பதில்லை. தேவனுடைய வசனமானது பாவியின் இருதயத்தைத் தொட்டு அவரைத் தேவனிடம் திருப்புவதில் ஆவியான வரின் முகவராகச் செயல்படுகிறது. இரட்சிப்பு என்பது தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் மூலமாக வருகிறது - ஒவ்வொருவரும் அவர் பங்கைச் செயல்படுத்துகின்றனர். நாம், வசனத்தின் மூலமாக வருகிற நமது விசுவாசம் நம்மை, தேவனுடன் நாம் கொண்டுள்ள முறிந்துபோன நிலையில் உள்ள உறவைத் திருத்திக் கொள்ளும்படி*

*ஊக்குவிக்கும்போது மட்டுமே இரட்சிப்பைப் பெறுகின்றோம். நாம் பாவமான வாழ்வை விட்டு விட்டு, இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசம் மற்றும் நம்மை உயிர்ப்பிக்க வைப்பதற்கான தேவனுடைய வல்லமை ஆகியவற்றின் மீது நாம் கொள்ளுகின்ற விசுவாசத்தின் அடிப்படையில் ஞானஸ்நானத்தில் ஒரு புதிய வாழ்வுக்குள் வருகின்றோம். இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதில் அவர் காட்சிப்படுத்திய அதே வல்லமையினால் நாம் இந்தப் புதிய வாழ்வில் நடக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம்.*

---

*குறிப்புகள்*

[1]A. J. Macleod, *The New Bible Commentary,* ed. F. Davidson (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 871. [2]Donald Grey Barnhouse, *The Love Life* (Ventura, Calif.: Regal Books, 1980), 36. [3]Robert Harvey Strachan, *The Fourth Gospel* (Edinburgh: Trumbell and Spears, 1917), 94. Second Esdras is an apocryphal (uninspired) book written around A.D. 100. [4]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 257-58. [5]Homer A. Kent, Jr., *Light in the Darkness* (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 59. [6]William Hendriksen, *Exposition of the Gospel According to John*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1972), 134. [7]*தேவனுடைய ராஜ்யமும் பரலோக ராஜ்யமும் இரண்டு மாறுபட்ட ராஜ்யங்கள் அல்ல, ஆனால் அவை ஒரே ராஜ்யமே (மத். 4:17; மாற். 1:14, 15). இது சமீபத்திருக்கிறது என்று யோவான் (மத். 3:2), இயேசு (மாற். 1:15), அப்போஸ்தலர்கள் (மத். 10:5, 7), மற்றும் எழுபது பேர்கள் (லூக். 10:9, 11) ஆகியோர் பிரசங்கித்த ராஜ்யமாக உள்ளது. இது கிறிஸ்தவராகின்றவர்கள் உலகத்திலிருந்து மாற்றப்படும் போது பிரவேசிக்கின்ற இயேசுவின் ராஜ்யமாக உள்ளது (கொலோ. 1:13). இப்போது இயேசுவின் ஆளுகையானது வானத்திலும் பூமியிலும் விரிந்துள்ளது (மத். 28:18; எபே. 1:19-23), சபை என்பது இதன் பூமிக்குரிய பாகமாக உள்ளது (மத். 16:18, 19). இயேசு தமது ராஜ்யத்தைப் பற்றித் தொடர்ந்து பேசினார் (மத். 5:3, 10, 19; 6:10, 33; 7:21; 13:19, 24, 31, 44, 45, 47). இந்த ராஜ்யம் தனது இருப்பிற்கு வசனமாகிய (லூக். 8:11) "நல்ல விதைக்கு"(மத். 13:37)க் கடன்பட்டுள்ளது, இந்த விதையை இயேசு இந்த பூமியில் நட்டுவைத்து பரிசுத்த ஆவியானவர் மூலம் ஏவுதல் பெற்ற மனிதர்களுக்குக் கொடுத்தார்.* [8]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 67-68. [9]H. Leo Boles, *The Holy Spirit* (Nashville: Gospel Advocate Co., 1971), 199. [10]*அப். 4:31; 5:20; 8:4, 25; 11:14, 19; 13:5, 26, 46, 49; 14:25; 15:35; 16:32; 17:13; 18:11 ஆகிய வசனங்களைக் காணவும்.*

[11]Bruner, 259.